செ.வெ.எண்.298/2020 நாள். 31.08.2020

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாட்டத்தில் 24.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகள் மற்றும் கட்டுபாடுகளுடன் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு அமலில் இருந்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் 31.08.2020 வரை தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள பொது ஊரடங்கு உத்தரவு ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுபாடுகளுடனும், தளர்வுகளுடனும், 30.09.2020 நள்ளிரவு 12 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது என (செ.கு.எண் 182 நாள் 30.08.2020) உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து 01.09.2020 முதல் 30.09.2020 நள்ளிரவு 12.00 மணிவரை மேலும் 30 நாட்களுக்கு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரடங்கு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்திகுறிப்புல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர (Except Containment Zone) மற்ற பகுதிகளில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கீழ்காணும் பணிகளுக்கும் 01.09.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது.

1) தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களிலிருந்து E-Pass இன்றி பொது மக்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு பயணிக்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து விமானம், ரயில் மற்றும் இதர வாகனங்களின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குள் வருவதற்கு E-Pass நடைமுறை தொடரும். ஆதார், பயணச் சீட்டு மற்றும் தொலைபேசி / அலைபேசி எண்ணுடன் E-Pass விண்ணப்பிக்கும் அனைவருக்கும் Auto generated முறையில் கணினி மூலமே சுய அனுமதி உடனடியாக பெரும் வகையில் E-Pass வழங்கப்படும்.

2) அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும், பொது மக்கள் தரிசனம் அனுமதிக்கப்படுகிறது. இதற்கென நிலையான வழிகாட்டு நடைமுறைகள் (Standard Operating Procedure) அரசால் வெளியிடப்படும். இதன் மூலம் ஒரு நாளைக்கு தரிசனத்துக்கு வரும் அதிகபட்ச பக்தர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதுடன், வழிபாட்டு தலங்களில் உள்ளேயும் கர்ப்பகிரகம் போன்ற புனித இடத்திற்கும் (Sanctum sanctorum) ஒரே நேரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர். வழிபாட்டுத் தலங்களுக்கு பொது மக்கள் தரிசனம் இரவு 08.00 மணி வரை மட்டும் அனுமதிக்கப்படும்.

3) மாவட்டத்திற்குள்ளான பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து, 01.09.2020 முதல் நிலையான வழிகாட்டு நடைமுறைகளுடன் (Standard Operating Procedure) செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

4) பெருநகர சென்னையில் மெட்ரோ ரயில் போக்குவரத்து 07.09.2020 முதல் இதற்கென வகுக்கப்படும் நிலையான வழிகாட்டு நடைமுறைகளுடன் (Standard Operating Procedure) செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

5) வணிக வளாகங்கள் (Shopping Malls), அனைத்து ஷோரூம்கள் (Show Rooms) மற்றும் பெரிய கடைகள் (Big format stores) 100 சதவிகித பணியாளர்களுடன், மத்திய அரசின் குளிர்சாதன வசதி குறித்த வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றியும், நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றியும் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், வணிக வளாகங்களில் (Shopping Malls) உள்ள திரையரங்குகள் இயக்க தடை தொடரும்.

6) மாவட்டம் முழுவதும் அனைத்து கடைகளும் இரவு 08.00 மணிவரை இயங்க அனுமதிக்கப்படுகிறது.

7) அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகள் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது. பார்சல் சேவை இரவு 9 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது.

8) மாவட்டம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தவிர்க்க இயலாத பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களை தவிர பிற பணியாளர்களை வீட்டிலிருந்தே பணிபுரிய ஊக்குவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9) தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள், ரிசார்டுகள், கேளிக்கை விடுதிகள் (Recreation Clubs) மற்றும் பிற விருந்தோம்பல் சேவைகள் (Clubs) நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி இயக்க அனுமதிக்கப்படுகிறது.

10) உடற்பயிற்சி மற்றும் அனைத்து விளையாட்டு பயிற்சிகளுக்காக, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி திறக்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், விளையாட்டு மைதானங்களில் பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.

11)திறன் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையான வழிகாட்டு நடைறைகளை (Standard Operating Procedure) பினபற்றி 21.09.2020 முதல் திறக்க அனுமதிக்கப்படுகிறது.

12) தற்போது 50 சதவிகித பணியாளர்களுடன் இயங்கும் அரசு அலுவலகங்கள், 01.09.2020 முதல் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்கும், எனினும், தனியார் மற்றும் அரசு அலுவலகங்களிலும், தொழிற்சாலை போன்ற பணியிடங்களிலும், கொரோனா தடுப்பு அலுவலர் ஒருவரை (Nodal Officer) தொடர்பு அலுவலராக நியமித்து, முறையாக வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவதையும், நோய்த் தொற்று உள்ளவர்கள் அலுவலகத்திற்கு வருவதை தவிர்க்கவும், அறிகுறி உள்ளவர்களை உடனுக்குடன் பரிசோதனை செய்வதை உறுதிப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

13) வங்கிகள் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்கள் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

14)நீலகிரி மாவட்டத்திற்கும், கொடைக்கானல், ஏற்காடு போன்ற அனைத்து மலை வாசஸ்தலங்களுக்கும், வெளியூர் சுற்றுலா பயணிகள் செல்லுவதை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியுடன் E-Pass பெற்று செல்ல அனுமதிக்கபடுவர்.

15) திரைப்படத் தொழிலுக்கான படப்பிடிப்புகளுக்கு உரிய வழிகாட்டி நெறிமுறைகளுக்கு உட்பட்டு, ஒரே சமயத்தில் 75 நபர்களுக்கு மிகாமல் பணி செய்ய அனுமதிக்கப்படுகிறது. படப்பிடிப்பின் போது பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.

16) ஞாயிற்றுக் கிழமைகளில் அமல்படுத்தப்பட்டு வந்த முழு ஊரடங்கு, செப்டம்பர் மாதம் முதல் ரத்து செய்யப்படுகிறது.

17) மாநிலங்களுக்கு இடையேயான இரயில் போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட தடங்களில் மட்டும் செயல்படும் எனவும், மாநிலத்திற்குள் பயணியர் ரயில்கள் செய்பட 15.09.2020 வரை அனுமதியில்லை என்றும், 15.09.2020க்குப் பிறகு தமிழ்நாட்டிற்குள் பயணிகள் இரயில்கள் அனுமதிப்பது பற்றி சூழ்நிலைக்கேற்ப அரசால் முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

18) விமானப் போக்குவரத்து மூலம் பயணிக்கும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் உள்ளூர் பயணிகள், தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்றை கண்டறிதலுக்கான புதிய நடைமுறை வெளியிடப்படும் (Protocol for Quarantine and testing) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

19) தற்போது நாள்தோறும் சென்னை விமான நிலையத்தில் வெளி மாநிலங்களில் இருந்து 25 விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இனி 50 விமானங்கள் வரை தரையிறங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, சேலம் ஆகிய விமான நிலையங்களில் விமானங்கள் தரையிறங்க தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நிலை தொடர்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொது**

- காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144-ன் கீழ் பொது இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடக் கூடாது என்ற நடைமுறை தொடர்ந்து அமலில் இருக்கும்.
- காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போதுள்ள நடைமுறைகளின்படி, எந்தவிதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.

<u>ஏற்கனவே நடைமுறையில் உள்ள கீழ்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும்வரை தொடர்ந்து அமலில் இருக்கும்.</u>

• பள்ளகள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள். எனினும், இந்நிறுவனங்கள் இணைய வழிக் கல்வி கற்றல் தொடர்வதுடன், அதனை ஊக்குவிக்கலாம்.

• திரையரங்குகள், நீச்சல் குளங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment / Amusement Parks), பெரிய அரங்குகள். கூட்ட அரங்குகள், கடற்கரை, உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள். சுற்றுலாத் தலங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள்.

• மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட வழித் தடங்களைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.

• புறநகர் மின்சார ரயில் போக்குவரத்து (Sub urban trains)

* மதம் சார்ந்த கூட்டங்கள், சமுதாய, அரசியல், பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், கல்வி விழாக்கள், பிற கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்த உள்ள தடை தொடரும்.

மாவட்ட நிருவாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தாலும், பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால், இந்த நோய் பரவலை தடுக்க இயலாது. பொது மக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவுவதையும், வெளியிடங்களில் முகக் கவசத்தை அணிந்து செல்வதையும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்து அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்து, மாவட்ட நிருவாகத்துக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான். இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியும். கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு எளிதாகவும், தீவிரமாகவும் பரவும் தன்மையுள்ள கடும் நோய் என்பதால், இதை கட்டுப்படுத்த காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.